மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.-தென் சென்னையில் துப்புரவுப் பணியாளர்கள் 29—12—1967 அன்று வேலை நிறுத்தம் செய்தனர். வட சென்னையின் தூய்மைப் பணியாளர்களையும் சேர்த்து சில மாநகராட்சித் தொழிலாளர் சங்கங்கள் 29—12—67 அன்று அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) இவர்களுடைய முக்கிய கோரிக்கைகள் :

(1) விலக்கு எதுவும் இன்றி மாநகராட்சிப் பணியாளர்கள் அனை வருக்கும் பயன்படுமாறு தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதித் திட்டத்தை நீட்டிக்க வேண்டும்.

(2) தொழிலாளர் பூரிப்பு ஊதிய நிதியில் சேர்ந்துள்ள தொகை யைத் திருப்பிக் கொடுத்தல்.

Madras City Corporation Elections

* 325. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the number of persons caught and prosecuted for having tried to exercise false vote during Madras City Corporation Elections ; and

(*b*) the number of persons sentenced ?

சென்னை மாநகராட்சி தேர்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) சென்னை மாநகராட்சி தேர்தலில் கள்ள ஓட்டுப் போட வந்தவர் கள் எத்தனை பேர் பிடிபட்டு வழக்கு தொடரப்பட்டது ?

(இ) எத்தனை பேர் தண்டனையடைந்தார்கள் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) 1968-ம் ஆண்டு அக் டோபர் திங்களில் நடைபெற்ற மாநகராட்சித் தேர்தலில் 38 பேர் கைது செய்யப்பட்டனர். ஆள் மாறாட்டக் குற்றம் செய்ததாக அவர்கள் மேல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

(இ) இந்த 38 பேரில் இத்தகைய குற்றமிழைத்ததற்காக, 33 பேருக்கு இதுவரை நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது. எஞ்சிய 5 வழக்குகள் விசாரணை தொடங்கப்படாத நிலையில் உள்ளன.

Chief Ministers' Conference on Community Development

* 326. *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the States that took part in the All India State Chief Ministers' Conference on Community Development and Panchayats during 11th and 12th of June 1968 at Madras ;

(*b*) the decisions taken by the Conference ; and

(*c*) the action taken thereon ?

[31st March 1969

சமுதாய வளர்ச்சி, கிராமிஊ நிர்வாகம் குறித்த முதல்வர்கள் மாநாடு

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1968 ஜூன், 11, 12 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற சமுதாய நலம், பஞ்சாயத்துக்கள் பற்றிய அனைத்திந்திய மாநில முதல்வர்கள் மகாநாட்டில் எந்தெந்த மாநிலங்கள் பங்கு கொண்டன ?

(இ) அம் மாநாடு எடுத்த முடிவுகள் யாவை ?

(உ) அதன்மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இந்திய உணவு, வேளாண்மை, சமுதாய நல வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகம் இந்த மாநாட்டைக் கூட்டியது. சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி நிர்வாகம் குறித்த மாநாடு 1968 ஜூன் 11-ம் நாள் நடைபெற்றது. கூட்டுறவுபற்றிய மாநாடு 1968 ஜூன் 12-ம் நாள் நடைபெற்றது. மாநாட்டில் கலந்து கொண்ட மாநிலங்கள், மைய அரசுக்குட்பட்ட மாநிலங்களின் பட்டியல்a அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(இ) மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து விவர அறிக்கைa ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

(உ) இந்திய அரசு மேற்சொன்ன தீர்மானங்களை மாநிலங்களுக்கு தெரிவித்தது. நான்காவது திட்டங்களைத் தயாரிக்கிறபோது மாநாட்டின் தீர்மானங்களை கவனத்தில் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. இம்மாநிலத்தில் அந்த முடிவுகள் அவ்வாறே கருத்தில் கொள்ளப்பட்டன.

திரு. என். சுந்தரேசத் தேவர் : பஞ்சாயத்து, பஞ்சாயத்து கூட்டு மன்ற விதிகளை மாற்றி அமைக்கவும் புது விதிமுறைகளை அமுலுக்குக் கொண்டுவரவும் அரசு ஆலோசித்து வருகிறதா ? அப்படியிருந்தால் அது எப்போது அமுலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி மன்ற சட்டதிட்டங் களைத் திருத்துவது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

Community Development Schemes

*327 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Central Government have announced that they will meet half of the expenditure for Community Development schemes ; and

(b) if so, whether the Central Government will meet half of the expenditure from the commencement of the Fourth Five-Year Plan?

சமுதாய நல திட்டம்

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சமுதாய நல திட்டத்துக்காகும் செலவில் பாதியை மத்திய அரசு ஏற்றுக் கொள்வதாய் கூறியுள்ளதா ?

(இ) ஆமெனில், நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முதல் மத்திய அரசு பாதி செலவை ஏற்றுக் கொள்ளுமா ?

---

a Printed as Appendix I on Pages 266–267